https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# பிரெஞ்சு இருத்தலியச் சிந்தனைகளும் தமிழ்ப் புனைகதைகளும்: அந்நியன், ஜே.ஜே. சில குறிப்புகள்-தாக்க ஒப்பாய்வு

**முனைவர் த. ஜெகதீசன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்
இந்திய மொழிகள் துறை, கலைப்புலம்
பனாரஸ் இந்து பல்கலைக்கழகம்
வாராணசி – 221005. உத்திரப் பிரதேசம்

**ஆய்வுச்சுருக்கம்**

*பிரெஞ்சு இலக்கியச் சூழலில் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருவாகி மிக ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்திய இருத்தலியச் சிந்தனைகள் தமிழ் இலக்கியச் சூழலில் உண்டாக்கிய பாதிப்புகளையும் குறிப்பாக அவை தமிழ்ப்புதினங்களில் வெளிப்பட்டுள்ள பாங்கையும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. குறிப்பாக, இருத்தலியச் சிந்தனைகளின் செல்வாக்கினால் உருவான இலக்கியப் போக்கினால் சுந்தர ராமசாமியின் ஜே.ஜே. சில குறிப்புகள் புதினம் எவ்வாறு தாக்கம் பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரை விவாதிக்கிறது. மேலும் பிரெஞ்சு மொழியில் ஆல்பெர் காம்யு எழுதிய புகழ்பெற்ற படைப்பான அந்நியன் புதினத்திற்கும் தமிழில் புகழ்பெற்ற புதினமான ஜே.ஜே. சில குறிப்புகளுக்கும் இடையிலான படைப்பாக்க நிலையிலான தாக்கம், உந்துதல்களை இனங்காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.*

***முதன்மைச் சொற்கள்:*** *இருத்தலியம், பிரெஞ்சு, தமிழ்ப் புனைகதைகள், அந்நியன், ஜே.ஜே. சில குறிப்புகள், தாக்கம்*

## இருத்தலியமும் தமிழ் இலக்கியச் சூழலும்

*ஐரோப்பியச் சூழலில் செல்வாக்கு செலுத்திய இருத்தலியம் 1950களின் பிற்பகுதியில் தமிழ்ச்சூழலுக்கு அறிமுகமானது. இந்த முதல்நிலையிலான அறிமுகமானது ஆங்கில வாசிப்பின் மூலம் உருவானது. அறிமுகமான நிலையில், இருத்தலின் அபத்தத்தையும் மரணத்தின் புதிர்களையும் முன்வைத்த இருத்தலியம் இங்கு ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. உலகப் போர்களால் தமிழ்ச்சூழல் நேரடியாகப் பாதிக்கப் படாமையும், காலனிய ஆட்சியிலிருந்து விடுதலையடைந்த உணர்வும் இங்கு நிலவியதால் வாழ்க்கையின் அபத்தம் குறித்த கருத்துக்கள் இங்கு பெரிய அளவிலான பாதிப்பினை உடனடியாக உண்டாக்கவில்லை. எனினும் 1960களுக்குப் பிறகான அரசியல் சூழல், வகுப்புக் கலவரங்கள், மாற்றமில்லாமல் தொடர்ந்த அவலங்கள் என நம்பிக்கை இழப்பும், வெறுமை நிலையும் உருவான நிலையில் இருத்தலியத்தின் வேர்கள் இங்கு பதியத்தொடங்கின. இந்நிலையில் பின்வரும் குறிப்பு கவனிக்கத்தக்கது:*

*தனிமனிதனுடைய இருப்பு அல்லது இன்மை குறித்த விவாதங்களுக்கு அதிக இடமளிக்கும் இலக்கியவடிவம் நாவல் தான். எனவே இருத்தலியம் நாவல் கலையை எளிதாகக் கையகப் படுத்திக் கொண்டது. தமிழ்ச்சூழலில் இருத்தலியம் நிலைபெறுவதற்கான சூழல் 1950க்குப் பின்னர் உண்டானதை விந்தனுடைய நாவல்கள் உணர்த்துகின்றன. இருத்தலியத்தை ஒரு தத்துவமையமாக தன் நாவல்களில் அவர் முன்வைக்கா விட்டாலும் வாழ்வின் அபத்தம், சாவுணர்ச்சி போன்ற கூறுகளை இவருடைய நாவல்களில் காண முடிகிறது.* (சு. கணேஷ், 2007: 107)

எனவே விந்தன் (1916-1975) தொடங்கிப் பின்னர் வந்த புனைகதைகளில் இருத்தலியக் கூறுகள் இடம்பெற்றுள்ளன என்பதை அவதானிக்கமுடிகிறது.

நவீனத்துவக் காலகட்டத்தில் இருத்தலியல் சிந்தனைகளே படைப்பாக்கத்தில் ஆதிக்கம் செலுத்தின. இருத்தலியம் தனிமனிதனை அடிப்படை அளவாகக் கொண்டு மனித வாழ்வை மதிப்பிட முயன்று அதன் வழியாக வாழ்க்கையில் உள்ள அர்த்தமின்மையையும் அபத்தத்தையும் எடுத்துக்காட்டியது. அதற்கு மிகப்பொருத்தமாகச் சிறுகதை வடிவம் அமைந்தாலும் நாவல், நாடகம் போன்ற இலக்கிய வகைமைகளும் இருத்தலிய இலக்கியச் சிந்தனைகளை முன்வைக்கும் முக்கிய ஊடகங்களாயின. வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட தருணத்தை எடுத்துக் கொண்டு அதை நுட்பமாகச் சித்திரித்து, அதில் உள்ள சாரமின்மையை வெளிப் படுத்துவதாக இருத்தலிய ஆக்கங்கள் அமைகின்றன.

இவ்வகை எழுத்தில் உச்சங்கள் என ஜெர்மானிய எழுத்தாளரான ஃபிரான்ஸ் காஃப்கா, பிரெஞ்சு எழுத்தாளரான ஆல்பெர் காம்யு என இருவரையும் சொல்வதே மரபாக உள்ளது. குறியீட்டுத் தன்மையுடன் கவித்துவமான கதைகளை எழுதிய காஃப்காவை முன்வைத்து காஃப்கா பாணி என்றும், செறிவான எதார்த்தச் சித்திரிப்பு மூலம் முரண் பாடுகளை முன்வைத்த காம்யுவை முன்வைத்து காம்யு பாணி என்றும் சொல்வது பிற்கால வழக்காயிற்று. (ஜெயமோகன், 2014: http://www.jeyamohan.in/169#.VZuwMH2RFgA)

இலக்கிய முயற்சிகளுடன் கோட்பாடுகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் எஸ். வி. ராஜதுரை 1975இல் எழுதிய *எக்சிஸ்டென்ஷியலிசம்: ஓர் அறிமுகம்* என்ற நூலும் 1979இல் எழுதிய *அந்நியமாதல்* என்ற நூலும் இந்நிலையில் கவனம் பெறுகின்றன. இருத்தலியம் குறித்தும் அந்நியமாதல் குறித்தும் வரலாற்று ரீதியிலான, தெளிவான அறிமுகத்துடன் அமைந்த இவ்விரண்டு நூல்களும் இலக்கியத்தளத்தில் இயங்கியவர்களுக்குக் கோட்பாட்டுப் புரிதலை வழங்கின. இந்நிலையில் க. பூரணச்சந்திரன் *எனது மொழிபெயர்ப்பு அனுபவங்கள்* என்ற கட்டுரையில்,

*1982 முதலாகவே நான், லிடரரி தியரி எனப்படும் இலக்கியக் கோட்பாட்டுப் படிப்பில் அக்கறைகாட்டி, அதைப்பற்றி எழுதி வந்திருக்கிறேன். அதற்கு மொழி பெயர்ப்பு பலவகையிலும் உதவியிருக்கிறது. அக்காலத்தில்தான் புதுக்கவிதை பெருவரவேற்புப் பெறத் தொடங்கியிருந்தது. அதைச்சார்ந்து படிமம், குறியீடு போன்றவை பற்றிய விவாதங்களும், சர்ரியலிசம் போன்ற கோட்பாட்டு அறிமுகங்களும் தேவையாக இருந்தன. எண்பதுகளின் தொடக்கத்தில் எக்சிஸ்டென்ஷியலிசம் தமிழகத்தின் சிறுபத்திரிகை வட்டாரங்களில் வரவேற்புப் பெற்றிருந்தது. அதன் காரணமாக சார்த்தர், காம்யூ போன்ற பிரெஞ்சு எழுத்தாளர்களின் எழுத்துகள் பழக்கமாயின. எங்கள் வட்டத்தைச் சேர்ந்த நண்பர்கள், காம்யூவின் அந்நியன், காலிகூலா போன்ற படைப்புகளை மொழிபெயர்த்தார்கள். சார்த்தரின் 'இருப்பும் இன்மையும்' (பீயிங் அண் நதிங்னஸ்), நாசியா போன்ற படைப்புகளில் ஈடுபட்டோம். 'பீயிங் அண் நதிங்னஸ்' படித்தது, பின்னர் பலவித தத்துவ விசாரங்களில் ஈடுபடவும் உதவியாக இருந்தது. (க. பூரணச்சந்திரன். 2015: பெறப்பட்டது: http://www.poornachandran.com/categ ory)*

என்று குறிப்பிடுவதைச் சான்றாகச் சொல்லலாம். இவ்வாறு மொழிபெயர்ப்புகள் இலக்கிய வாசிப்பிலும் திறனாய்விலும் செல்வாக்குடையதாக விளங்குகின்றன.

## இருத்தலியத் தமிழ்ப் புதினங்கள்

1960களுக்குப் பின்னர் தமிழகத்தின் அறிவுத்துறை வட்டாரத்தில் இருத்தலியக் கோட்பாடுகள் பரவலான கவனிப்பைப் பெறத்தொடங்கின. இச்சூழலில்தான் இருத்தலியத் தத்துவத்தை மையமாகக்

*கொண்ட எழுத்துக்கள், குறிப்பாக நாவல்கள் வெளிவரத் துவங்கின. தனி மனிதவாதம் வலுப்பெற்று நாவல் எழுத்துக்களின் பரப்பில் இருத்தலியச் சிந்தனைகளின் செல்வாக்கு அதிகரித்தது. அவ்வகையில் க.நா. சுப்ரமண்யம், லா.ச. ராமாமிர்தம், தி.ஜானகிராமன், ஜெய காந்தன், இந்திரா பார்த்தசாரதி, அசோக மித்திரன், நகுலன், ஜி. நாகராஜன் ஆகியோர் இருத்தலியச் சிந்தனைகளை நாவல்களில் மையப்படுத்தி எழுதினர்.*

*தமிழ்ச்சூழலில் தனிமனிதனின் இருத்தலு டன் உளவியலையும் சேர்த்து அழுத்த மாக முன்வைத்தவர் தி. ஜானகிராமன் ஆவார். இருத்தலியச் சிந்தனைகளும் சிக்மண்ட் ஃபிராய்டின் கருத்துக்களும் தமிழ்ச்சூழலில் ஏற்படுத்திய ஆழமான தாக்கத்தினை இவரது நாவல்களில் காணலாம். இவரது* மோகமுள் *நாவலில் வரும் பாபு,* உயிர்த்தேன் *நாவலில் வரும் பழனிவேலு போன்ற கதைமாந்தர்கள் இருத்தலியச் சார்புடையவர்களாக உள்ளனர். சூழலுடன் ஒன்றிணைந்து போகமுடியாத அந்நியத்தன்மை, வெறுமைநிலை, சாவுணர்ச்சி மேலோங் கிய நிலை போன்றவை இக்கதை மாந்தர்களின் செயல்பாடுகளில் வெளிப் படுவனவாக உள்ளன. பிரெஞ்சு இருத்தலிய இலக்கியங்களின் நேரடித் தாக்கத்தைப் பெற்றுள்ள சில நாவல் களை இனிக்காண்போம்.* ஜே. ஜே: சில குறிப்புகள் *நாவல் பற்றிய பதிவுகளும் இந்திரா பார்த்தசாரதி முதலிய வேறு சில நாவலாசிரியர்களின் நாவல் பற்றிய செய்திகளும் இப்பகுதியில் இடம்பெறு கின்றன.*

## ஜே. ஜே: சில குறிப்புகள்

*தமிழ் எழுத்துச் சூழலில் தனிமனித வாதப் படைப்புகளுக்கான இடத்தைப் பதிவு செய்வதில் முன்னோடிகள் ஏற்கனவே இருந்த போதிலும் சுந்தர ராமசாமி எழுதிய* ஜே. ஜே: சில குறிப்புகள் *நாவல் முக்கிய இடத்தைப் பெறுகிறது. 1981ஆம் ஆண்டு வெளியான இந்நாவல், நாவல் எழுத்துப் போக்கு களில் முக்கியத்திருப்பங்களை ஏற்படுத்தி யது. சமூகம், விடுதலை, குடும்பம் ஆகியவற்றை மையமிட்ட கதையாடலு க்கு மாற்றாக முழுக்க முழுக்க தனி மனிதவாதப் பின்னணியுடன் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. புதுமுறையிலான வாசிப்பைக் கோருகிற இந்நாவல் ஏற்படுத்திய அதிர்வுகள் கவனிக்கத் தக்கன. சமூகம், பண்பாடு, அரசியல், இலக்கியப் போக்குகள் ஆகியவற்றின் மீதான விமர்சனப்பூர்வமான கேள்வி களை எழுப்பும் இந்நாவல், அவற்றின் பின்னணியிலான தனிமனிதனின் இருத்தல் சார்ந்த அவலங்களையும் அபத்தங்களையும் மையமாகக் கொண்டுள்ளது.*

*நாவலில் வரும் பல தொடர்கள் ஜே. ஜே. என்ற தனிமனிதனுடைய இருத்தலு க்கும் அவன் வாழும் சூழலுக்குமிடை யேயான ஒத்திசைவின்மையை வெளிப் படுத்துகின்றன. அவன் வாழ்க்கைச் சூழலில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகள் ஜே.ஜே. என்ற தனி மனிதனின் வாழ்க்கையோடு தொடர் பற்று அதேசமயத்தில் அவனுடைய வாழ்வை வெகுவாகப் பாதிக்கின்றன. நேரடியாகக் காரணகாரியத் தொடர் பின்றி நடைபெறும் இந்த அபத்தங் களால் அவனுடைய சுயம் அழிக்கப் படுகிறதாக உணர்கிறான். மேலும் இந்நாவலில் வரும் சாவுணர்ச்சி தீவிர மானது. சம்பத் என்பவரின் கனவுக் குறிப்புகளாக வரும் நாவல் பகுதி இதனை அடையாளப்படுத்துவதாக உள்ளது.*

*மிகுந்த ஆனந்தத்தோடு ஆளுக்கொரு பகுதியாக என்னைக் கூறுபோட்டுத் தாக்குகிறார்கள். என் உடலிலிருந்து என் சதையெல்லாம் பிய்த்து நாலாபுறமும் வீசியாகிவிட்டது. நொறுங்க எலும்புகள் ஒன்றுகூட இனி பாக்கி இல்லை. எரிபந்தத்தால் என் கண்களை அவித்தார்கள் பாவிகள். என் உயிர் மட்டும் மின்மினிப் பூச்சிபோல் பளிச் பளிச் என்று ஒரு புல் நுனியில் போய் ஒட்டிக்கொண்டது. பாதங்களால் அதையும் அரைத்துத் தேய்த்தார்கள். நான் இறந்துவிட்டேன். (120)*

*வாழ்வின் அர்த்தமற்ற கூறுகளால் பாதிப்படைந்து சிதைந்துபோன ஒரு மனிதமனத்தின் வெளிப்பாடு இது. தன்னுடைய உடலும் உயிரும் 'மற்றவர் களால்' அழிக்கப்படுவதான காட்சிப் படிமங்கள், தன் இருத்தல் அழிவதைத் தடுக்க முடியாத, இருத்தலை வாழ்தலின் மூலமாக அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாத இயலாமையின் வெளிப்பாடு களாக இவை அமைகின்றன. நாவலின் போக்கில் சமூகத்திலிருந்து ஜே. ஜே. என்னும் தனிமனிதன் எவ்வாறு அந்நியப் படுகிறான் என்பதையும் ஓர் இழையாக*

சுந்தர ராமசாமி வெளிப்படுத்துகிறார்.

### தாக்கமும் உந்துதலும்

இந்நிலையில் *ஜே. ஜே: சில குறிப்புகள்* நாவலைப் பிரெஞ்சு இருத்தலியச் சிந்தனையாளர்களுள் ஒருவரான ஆல்பெர் காம்யு எழுதிய *அந்நியன்* நாவலுடன் பல்வேறு நிலைகளில் ஒப்பிட முடியும். நாவலின் நடை, கதை மாந்தர்களின் பெயர்கள், செயல்பாடுகள், அமைப்பு முறை ஆகிய நிலைகளில் இவ்விரண்டு நாவல்களும் ஒத்துள்ளன. அந்நியன் நாவலின் துவக்க வரிகள் மிகவும் புகழ்பெற்றவை:

***இன்று அம்மா இறந்துவிட்டாள். ஒரு வேளை நேற்றாகவும் இருக்கலாம்; எனக்குத் தெரியாது. முதியோர் இல்லத்திலிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது, "தாயார் மரணம். நாளை அடக்கம். ஆழ்ந்த அனுதாபங்கள்." இதற்கு ஒன்றும் அர்த்தமில்லை. ஒருவேளை நேற்றாகவும் இருந்திருக்கலாம்.*** *(ப.9)*

இவ்வரிகள் அவை சொல்லப்பட்ட விதத்திற்காகவும் அவைசொல்லும் செய்திக்காகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. அம்மா இறந்தசெய்தியை மெர்சோ என்ற தனிமனிதன் அணுகும்விதம் அவனுக்கும் தனது அம்மாவிற்குமான இடைவெளியை, அந்நியத்தன்மையை அறிவிப்பதாக உள்ளன. அம்மா இறந்தது ஒருவேளை நேற்றாகவும் இருக்கலாம், மேலும் இதற்கு ஒன்றும் அர்த்தமில்லை என்ற வரிகள் நாவலின் போக்கை ஓரளவிற்குத் தெளிவுபடுத்திவிடுகின்றன. இந்நிலையில், *ஜே. ஜே: சில குறிப்புகள்* நாவலின் தொடக்கவரிகளும் கவனிக்கத் தக்கவை:

*ஜோசஃப் ஜேம்ஸ் 1960 ஜனவரி 5ஆம் தேதி தனது 39ஆவது வயதில், ஆல்பெர் காம்யு விபத்தில் மாண்டதற்கு மறுநாள் இறந்தான். இன்று இருந்திருந்தாலுங்கூட அவனுக்கு 57 வயதுதான் ஆகியிருக்கும் (ப.11)*

நாவலின் முதன்மையான கதைமாந்தரான ஜே. ஜே. இறந்த செய்தியுடன் நாவல் துவங்குகிறது. அதுவும் ஆல்பெர் காம்யு கார் விபத்தொன்றில் 1960 ஜனவரி 4ஆம் தேதி இறந்த மறுநாள் ஜே. ஜேவும் இறந்துபோகிறான். இவ்வாறு அதிர்ச்சியான தொடக்கத்துடன் நாவலின் உட்பொருளை உணர்த்தும் விதத்தில் இவ்விரு நாவல்களும் ஒத்துள்ளன. பரபரப்புக்காக அல்லாமல், மரணம்தான் அபத்த வாழ்வின் விடுதலைக்கான ஒரே சாத்தியக்கூறு என்ற இருத்தலியத் தத்துவத்தின் அடிப்படை இங்கு அடிநாதமாக ஒலிக்கிறது.

அந்நியன் நாவலின் துவக்க வரிகள் சொல்லும் மரணம் பற்றிய செய்திகள் அந்நாவலின் இறுதி வரிகளின் மூலம் அர்த்தம் பெறுகின்றன. கடற்கரையில் நடைபெற்ற சண்டையொன்றில் ஓர் அராபியனைக் கொன்ற குற்றத்திற்காக மரண தண்டனை பெறும் மெர்சோ, தன் தாயின் மரணத்தை இவ்வாறு உணர்கிறான்:

***மரணத்துக்கு அவ்வளவு அருகில் இருந்த அம்மா, விடுதலை பெற்று ஒரு புதிய வாழ்வைத் தொடங்குபவள்போல் உணர்ந்திருக்க வேண்டும்…*** *(140)*

அம்மாவைப் பற்றி இவ்வாறு கருதும் மெர்சோ, தன்னுடைய இறப்பைக் குறித்து எண்ணும்போது,

***ஆக எல்லாம் முழுமை பெறவேண்டுமானால், என் தனிமை உணர்வு ஓரளவு குறைய வேண்டுமானால், நான் விழையக் கூடியது ஒன்றே ஒன்றுதான்–என் தலை துண்டிக்கப்படும் தினத்தன்று பெரும் எண்ணிக்கையில் பார்வையாளர்கள் இருக்கவேண்டும்; வெறுப்பு கலந்த கூக்குரலுடன் என்னை அவர்கள் வரவேற்க வேண்டும்.*** *(140)*

என்று எண்ணுகிறான். எனவே மெர்சோவின் மரணமும் ஜே. ஜேவின் மரணமும் நாவலின் இறுதி, நாவலின் முதல் என்ற இரு எதிரெதிர் நிலைகளில் அமைகின்றன.

மேலும் ஆல்பெர் காம்யு கால்பந்தாட்ட அணியில் இருந்தவர் என்பதும் சுந்தர ராமசாமியின் நாவலில் வரும் ஜே. ஜேவும் கால்பந்தாட்டம் விளையாடுபவனாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. நாவலில் ஆல்பெர்ட் என்று ஒரு பாத்திரத்தின் பெயரும் அமைவது நோக்கத்தக்கது. ஆக, பிரெஞ்சு இருத்தலியத் தாக்கம் என்ற பொதுவான நிலையிலிருந்து, ஆல்பெர் காம்யுவின் அந்நியன் நாவலின் தாக்கத்தை *ஜே. ஜே: சில குறிப்புகளில்* இனங்காணமுடிகிறது. தாக்கம் எனும்போது, ஒன்றை அப்படியே பிரதியெடுத்தல் என்பதாக அல்லாமல், நாவலின் பல்வேறு தளங்களின் ஆழமான தாக்கத்தை இனங்காணமுடிகிறது. *அந்நியன்* நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு

*1980ஆம் ஆண்டு வெ.ஸ்ரீராமின் நேரடி மொழிபெயர்ப்பில் வந்தது. 1975ஆம் ஆண்டு தொடங்கி ஆறு ஆண்டுகளாக ஜே.ஜே: சில குறிப்புகள் நாவலை எழுதியதாகச் சொல்லும் சுந்தர ராமசாமியின் நாவல் 1981ஆம் ஆண்டு வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது.*

*ஜே. ஜே: சில குறிப்புகள் வெளிவந்து இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து காலச்சுவடு வெளியிட்டுள்ள பதிப்பின் பின்னுரையில் சுகுமாரன் குறிப்பிடும் கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது.*

***ஆல்பெர் காம்யுவின் எழுத்துக்கள் அன்று பெரும் அலையாக என் கருத்திலும் கவனத்திலும் மோதிக்கொண்டிருந்தன. ஜே.ஜே: சில குறிப்புகளின் முதல்வரியே காம்யுவை நினைவுபடுத்துவதாக அமைந்திருந்தது, நாவலுடனான வாசக உறவை வலுப்படுத்திக்கொள்ளும் முனைப்பைக் கூடுதலாக்கியது. ஜோசப் ஜேம்ஸ் என்ற கற்பனைப் பாத்திரத்தின் உயிர்ச்சாயல் சி.ஜே. ஜோசப் என்ற மலையாள எழுத்தாளனின் அடையாளங்களைக் கொண்டிருந்ததைவிடக் காம்யுவின் தோற்றத்தைக் கொண்டிருப்பதாக நம்புவது அன்றைய மனநிலைக்கு உவப்பாக இருந்தது. ஜோசப் ஜேம்ஸ் – ஆல்பெர் காம்யு என்ற பெயர்களின் உச்சரிப்பு ஒற்றுமையில் மனம் மயக்கம் கொண்டது. காம்யுவின் பிரச்சினை மனிதச்சூழலின் நெருக்கடியை ஆராய்வது, அந்த ஆய்வுக்குச் சுதந்திரமான சிந்தனையைச் சார்ந்திருப்பது என்பதாகக் கருத்துக் கொண்டிருந்தேன். அந்தக் கருத்தின் தமிழ் வடிவம் அல்லது திராவிட வடிவமே ஜே.ஜே. என்ற நம்பிக்கையும் கவனத்தில் வேரோடியிருந்தது.*** *(2014: 217)*

மேலும், *ஜே. ஜே: சில குறிப்புகள்* நாவலின் *1986*ஆம் ஆண்டு பதிப்பு முன்னுரையில் தமிழறிந்த பிரெஞ்சு இந்தியவியல் ஆய்வறிஞரான பிரான்சுவா குரோவின் (François Gros) அவதானிப்பும் நாவலின் பிரெஞ்சுத் தொடர்பை விளக்குவதாக உள்ளது.

***தமிழில் ஒரு சித்தாந்த விவாதத்தை மிகவும் அசலான முறையில் கொண்டு வருவதன் மூலமாக, தற்கால இந்தியச் சூழலில் இவர் பதியம் வைத்திருக்கும் கோட்பாடுகள், அக்கறைகள் ஆகியவற்றின் மூலங்கள் அல்லது வெளிப்பாடுகள் மேலைநாடுகளில் தோன்றியவை என்பது மறுக்க முடியாதது. சுந்தர ராமசாமியின் கொள்கைத் தீவிரம் முழுவதும் இருந்தால்தான் தமிழ்வாசகர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்ற அளவில் இருக்கும் சில கருத்துகள், பிரெஞ்சில் சாதாரணமானவையாகத் தோன்றக் கூடும். இந்த அசாதாரணமான அணுகலின் விளைவு ஒரு இலக்கிய ஆவணமாக ஆகாமல் ஒரு வெற்றிகரமான நாவலாக அமைந்துவிட்டமை இம்முயற்சியை மிக சுவாரஸ்யமான தொன்றாக ஆக்கிவிட்டிருக்கிறது.*** (http://www.crea.in/outforprint.php?page=4)

இவ்வாறு பல நிலைகளில் தமிழில் மாற்றுச்சிந்தனையை முன்வைக்கும் இலக்கியப்பிரதிக்கும் அதன் தத்துவவேருக்கும் பிரெஞ்சு இருத்தலியச் சிந்தனை ஆதாரமாக இருந்துள்ளதை அறியமுடிகிறது. மேலும் வெ. ஸ்ரீராம் மொழிபெயர்ப்பில் வெளிவந்த *அந்நியன்* நாவல் குறித்துப் பேசும் குரோ, ‘பிரெஞ்சிலிருந்து ஆங்கிலம் வழியாகத்தான் தமிழ் மொழிபெயர்ப்புகள் என்ற போக்கிற்கு மாறாக, நேரடியாகப் பிரெஞ்சிலிருந்துத் தமிழுக்கு வந்த *அந்நியன்* மொழிபெயர்ப்பு முயற்சி மறுக்க முடியாத திருப்புமுனை, முக்கியமான முதல் அடிச்சுவடு என்கிறார். குறிப்பாக, காம்யுவின் எழுத்தை மூலத்துக்கு உண்மையாக, மிகச் சிறந்த முறையில் மொழிபெயர்த்து நீங்கள் அளித்த அந்தப் பின்னணியில் அதற்கடுத்த வருடம் வெளிவந்த சுந்தர ராமசாமியின் *ஜே.ஜே. சில குறிப்புகள்* படைப்பும் தமிழ் வாசகர்களின் பார்வையை காம்யுவின் பக்கம் திருப்ப உதவியது’ என்று குறிப்பிடுகிறார். *(பிரான்சுவா குரோ, 2011: 44)* இது *அந்நியன் – ஜே.ஜே: சில குறிப்புகள்* இடையேயான தொடர்பை, செல்வாக்கை, தாக்கத்தை ஆழமாக உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

*1964* செப்டம்பர் மாதம் இலக்கிய வட்டம் இதழில் *கொள்கை* என்ற தலைப்பில் சுந்தர ராமசாமி எழுதிய கவிதையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

…………………..

ஸாத்ரேக்கு/எக்ஸிஸ்—டென்ஷலிஸம்/
காமுவுக்கு/இன்னொன்று

பின்னால்/வேறொன்று,

காமுவின் விதவைக்கு/மற்றொன்று,

பிறிதொன்று/அவள் அருமைப்/பாட்டிக்கு

………………

நாம் எல்லாம்/டமில் எழுத்தாளர்

நமக்கோ/பிளேஜியரிஸம்.

சுந்தர ராமசாமி ஏற்கனவே பிரெஞ்சு இலக்கியவாதிகளை, குறிப்பாக இருத்தலிய வாதிகளை அறிந்திருந்தார்/தாக்கம் பெற்றிருந்தார் என்பதற்கான சான்றாக இக்கவிதை அமைகிறது. இதன் அதிகபட்ச வெளிப்பாடாகவே *ஜே.ஜே: சில குறிப்பு கள்* நாவலும் அதன் பிற அம்சங்களும் அமைகின்றன. இதன்வழி ஒரு புதிய எழுத்துமுறை தமிழில் அறிமுகமாகி செல்வாக்கு பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

*ஜே.ஜே: சில குறிப்புகளில்* 'தனிமனித வாதம்' ஒரு முழு சித்தாந்தமாகவே மாறியுள்ளது. தனிமனித மையவாதம் பொருள்முதல் வாதத்தின் எல்லைக்கு உட்பட்டது என்றும், *ஜே. ஜே: சில குறிப்புகள்* மூலம் சுந்தர ராமசாமி முன்வைக்கும் தனிமனித மையவாதம் கருத்துமுதல் வாதம் நோக்கி நகர்ந்து ள்ளது என்றும் சுருக்கமாகக் கூறலாம். ஜெயமோகனின் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

***இந்நாவல் தமிழ்ப் புனைகதைச் சூழலில் புதுமையானதாகக் கருதப்படுவதற்கு அதன் 'அந்நியத்தன்மை' ஒரு முக்கியக் காரணமாகும். ஏனெனில் அதன் கதைகூறு முறைக்கு தமிழ்ச் சமூகத்தில் எந்த வேரும் இல்லை. அறிவார்ந்த தளத்தில் அதில் இடம்பெறும் சூழல் மீதான நம்பகத்தன்மை மிகவும் குறைவு. புனைவை உருவாக்கிய விதத்தை விடவும் தனது உரைநடையின் செழுமையினாலாயே இந்நாவல் ஒரு கலைப் படைப்பாகத் தன்னை நிறுவிக்கொள்கிறது என்ற ஜெயமோகனின் அவதானிப்பு இங்கு நோக்கத்தக்கது.*** (2009: 130-31)

*ஜே.ஜே: சில குறிப்புகள்* நாவல், அதன் அமைப்பு அடிப்படையில் சார்த்தரின் '*குமட்டல்*' நாவலை ஒத்துள்ளது எனக் குறிப்பிடலாம். நாட்குறிப்புகளின் அடிப் படையில் அமைந்திருக்கும் அந்நாவல், தமிழில் வெளிவந்த நவீன நாவல்களில் முக்கிய இடம்பெறுகிறது. மரபான கதைசொல்லலில் இருந்து விலகி, நாவலை நாட்குறிப்புகளின் தொகுப்பாக அமைத்திருப்பது அந்நாவலுக்கு மாறுபட்ட தன்மையை அளிக்கிறது.

## முடிவுரை

ஒரு மொழி இலக்கியம் மொழிபெயர்ப் பின் வாயிலாக பெறுமொழிச் சூழலில் ஏற்படுத்தும் தாக்கம், உந்துதலானது அம்மொழியின் புதிய இலக்கியப் போக்குகளுக்கு வித்திடுவற்குச் சான்றாக *அந்நியன்* – *ஜே.ஜே. சில குறிப்புகள்* புதினங்களைக் குறிப்பிடலாம். தமிழ் புத்திலக்கியச் சூழலில் சுந்தர ராமசாமி யின் மிகச் சிறந்த, புதுமையான படைப் பாக அறியப்படும் புதினத்திற்கான உந்துதல் அவரது உலக இலக்கியப் பரிச்சயத்தினாலும் ஆழமான பிரெஞ்சு இலக்கிய புலமையினாலும் நிகழ்ந்துள் ளது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக் கிறது. இதே நோக்கில் ஜி. நாகராஜன், இந்திரா பார்த்தசாரதி, எஸ். சம்பத் ஆகியோரின் புதினங்களை ஆராயும் போது பிரெஞ்சு இருத்தலியச் சிந்தனை கள் தமிழ்ச் சூழலில் ஏற்படுத்திய தாக்கத்தை, உந்துதலை இனங்காண முடியும்.

## துணைநூற்பட்டியல்


- கணேஷ், சு. (2007). சாவு: இருத்தலிய மும் சில தமிழ் நாவல்களும் (ஃப்ராய்டியக் குறிப்புகளுடன்). இளம்பரிதி, மொ. (தொ.ஆ), *நாவல்: நவீனப் பார்வைகள்* (பக்.99-115). சென்னை: காவ்யா பதிப்பகம்.
- சுந்தர ராமசாமி. (2014) (16வது பதிப்பு). *ஜே. ஜே: சில குறிப்புகள்.* நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
- ——— (2008). பிக்காஸோவின் ஆடு – சில பாரிஸ் அனுபவங்கள். ராஜமார்த் தாண்டன் (தொ.ஆ), *சுந்தரராமசாமியின் காலச்சுவடு,* (பக்.345-46) நாகர்கோவில்:காலச்சுவடு பதிப்பகம்.
- ஜெயமோகன். (2009). *நாவல் கோட் பாடு.* சென்னை: கிழக்கு பதிப்பகம்.
- ஸ்ரீராம், வெ. (மொ.ஆ). (1980). *அந்நியன்.* சென்னை: க்ரியா.


## நேர்காணல்


- பவுத்த அய்யனார். (2011). வெ. ஸ்ரீராம் – தனித்துவமிக்க மொழிபெயர்ப் பாளர். *நேர்காணல்,* எண்.4. அக்டோபர் – டிசம்பர்.


## இணையத் தரவுகள்


- http://www.jeyamohan.in/169#.VZuwMH2RFgA as on 31.12.2015 at 1.32pm.
- http://www.poornachandran.com/category as on 18.04.2015 at 11.20am.
- http://www.crea.in/outforprint.php?page=4 as on 19.05.2015 at 09.50am.